ஐந்தாந் தந்திரம்

1. சுத்த சைவம்

1419 ஊரு முலகமு மொக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவு மூவுல காளியி லங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே. 1

1420 சத்து மசத்துஞ் சதசத்துந் தான்கண்டு
சித்து மசித்துஞ் சேர்வுறு மேநீத்த
சுத்த மசுத்தமுந் தோய்வுறு மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே. 2

1421 கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. 3

1422 வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே. 4

2. அசுத்த சைவம்.

1423 இணையார் திருவடி யேத்துஞ்சீ ரங்கத்
திணையா ரிணைக்குழை யீரணை முத்திரை
குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்று
தணைவாஞ் சரியை கிரியையி னர்க்கே. 1

www.aakikceyogam.com

1424 காதுப்பொ னார்ந்த கடுக்க னிரண்டுஞ்சேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து வுபதேச மார்க்கரா
யோதி யிருப்பா ரோருசைவ ராகுமே. 2

1425 கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்க ளொன்பதுங் கண்டா யரும்பொருள்
கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. 3

1426 ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையு முழுவெண்ணெண் சித்தியு
மேனை நிலமு மெழுதா மறையீறுங்
கோனொடு தன்னையுங் காணுங் குணத்தரே. 4

3. மார்க்க சைவம்

1427 பொன்னுற் சிவசாத னம்பூதி சாதன
நன்மார்க்க சாதன மாஞான சாதனந்
துன்மார்க்க சாதனந் தோன்றுத சாதனஞ்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே. 1

1428 கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தி
னூடுறு ஞானே தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே. 2

1429 ஆகம மொன்பா னதிலான நாலேமு
மோகமி லைலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
றுக முடிந்த வருஞ்சுத்த சைவமே. 3

www.aakikceyogam.com

1430 சுத்த மசுத்தந் துரியங்க ளோரேழுஞ்
சத்து மசத்துந் தணந்த பராபரை
யுத்த பராபரை யுள்ளாம் பராபரை
யத்த னருட்சத்தி யாயெங்கு மாமே. 4

1431 சத்து மசத்துந் தணந்தவர் தானாகிச்
சித்து மசித்துந் தெரியாச் சிவோகமாய்
முத்தியு ளானந்த சத்தியுண் மூழ்கினர்
சித்தியு மங்கே சிறந்துளர் தானே. 5

1432 தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
யுன்னத் தகுஞ்சுத்த சைவ ரூபாயமே. 6

1433 பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போத
மாரண மந்த மதித்தானந் தத்தோடு
நேரென வீராறு நீதி நெடும்போகங்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. 7

1434 மாறாத ஞான மதிப்பற மாயோகந்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறிநிற்றல்
கூறாகு ஞானி சரியை குறிக்கிலே. 8

1435 வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவ ரூபாயமே. 9

1436 விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிக
ளெண்ணினைச் சென்றணு காம லெனப்படு
மண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே. 10

www.aakikceyogam.com

1437 ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றுக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. 11

4. கடுஞ்சுத்த சைவம்

1438 வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
யாடம்பர மின்றி யாசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோத கர்சுத்த சைவரே. 1

1439 உடலான வைந்தையு மோராறு மைந்து
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனியுறல் சித்தாந்த மார்க்கமே. 2

1440 சுத்தத் சிவனுரை தானத்திற் றேயாமன்
முத்தர் பதப்பொருண் முத்திவித் தாமூல
மத்தகை யான்மா வரனை யடைந்தற்றுற்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே. 3

1441 நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றுனென்று நானென்றுஞ் சாற்றகி லேனே. 4

1442 சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தா
லாற்றரி தாகிய வைந்து மடங்கிடு
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. 5

www.aakikceyogam.com

5. சரியை

1443 நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்
றுய்ந்திடுங் காலாங்கி கஞ்சன் மலையமா
னோ்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்தசை வத்துக் குயிரதே. 1

1444 உயிர்க்குயி ராய்நிற்ற லொண்ஞான பூசை
யுயிர்க்கொளி நோக்கின் மகாயோக பூசை
யுயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை
செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே. 2

1445 நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. 3

1446 பத்தர் சரியை படுவோர் கிரியையோ
ரத்தகு தொண்ட ரருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. 4

1447 சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னயினோர்
சேர்ந்தவெண் யோகத்தோர் சித்தர் சமாதியோ
ராய்ந்த கிரியையோ ரர்ருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீணிலத் தோரே. 5

1448 கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை
யரிய சிவனுரு வமரு மரூபந்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
யுரியன நேயத் துயர்பூசை யாமே. 6

1449 சரியாதி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளான துநந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. 7

www.aakikceyogam.com

1450 சமையம்பல சுத்தித் தன்செய லற்றிடு
மமையும் விசேடமு மரன்மந்தி ரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகு
மமைமன்னு ஞானமார்க் கம்மபி டேகமே. 8

6. கிரியை

1451 பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிலரில்லை யென்ப தினமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. 1

1452 கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினு
மூனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்குழல் சேரவொண் ணாதே. 2

1453 கோனக்கன் றாயே குரைகழ லேத்துமின்
ஞானக்கன் றாகிய நடுவே யுழிதரும்
வானக்கன் றாகிய வானவர் கைதொழு
மானக்கன் றீச னருள்வள்ள மாமே. 3

1454 இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லா
மதுபணி செய்கின் றவளொரு கூற
னிதுபணி மானுடர் செய்பணி யீசன்
பதிபணி செய்வது பத்திமை காணே. 4

1455 பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த வருளாற் றுரிசற்ற யோகத்தி
லுய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. 5

www.aakikceyogam.com

1456 அன்பி னுருகுவ னுளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புநின் றங்கே மொழிவ தெனக்கரு
ளென்பினுட் சோதி யிலங்குகின் றனே. 6

7. யோகம்

1457 நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித்
தறியிருந் தாற்போலத் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. 1

1458 ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லா
லூழிதோ றூழி யுணரவுந் தானொட்டா
னூழி யமரு மரியய னென்றுளார்
ரூழி முயன்று மொருச்சியு ளானே. 2

1459 பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
வோவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. 3

1460 உய்ந்தன மென்பீ ருறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திரு ணீங்கினுன்
முந்தப் பிறவிக்கு மூலவித் தாமே. 4

1461 எழுத்தொடு பாடலு மெண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியு நீங்கா
வழித்தலைச் சோமனே டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே. 5

www.aakikceyogam.com

1462 விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயில் விண்ணவ னாகுமே. 6

1463 பேணிற் பிறவா வுலகருள் செய்திடுங்
காணிற் றனது கலவியு ளேநிற்கு
நாணி னரக நெறிக்கே வழிசெயு
மூனிற் சுடுமங்கி யுத்தமன் றானே. 7

1464 ஒத்தசெங் கோலா ருலப்பிலி மாதவ
ரெத்தனை யாயிரம் வீழ்ந்தவ ரெண்ணில
சித்தர்க டேவர்கண் மூவர் பெருமையா
மத்த னிவனென்றே யன்புறு வார்களே. 8

1465 யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றே
ராகத் தகுகிரி யாதி சரியையாந்
தாகத்தை விட்ட சரியையொன் றாமொன்று
ளாதித்தன் பத்தியு ளன்புவைத் தேனே. 9

1466 யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே யட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோகவபி டேகமே யொண்சித்தி யுற்றலே. 10

8. ஞானம்

1467 ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நகரின்மிக் காரே. 1

www.aakikceyogam.com

1468 சத்தமுஞ் சத்த மனனுந் தகுமன
முய்த்த வுணர்வு முணர்த்து மகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. 2

1469 தன்பா லுலகுந் தனக்கரு காவது
மன்பா லெனக்கரு ளாவது மாவன
வென்பார்கண் ஞானமு மெய்துஞ் சிவோகமும்
பின்பாலி னேயமும் பெற்றிடுந் தானே. 3

1470 இருக்குஞ் சேம்மி யிடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகு முலகந்
தருக்கிய வாசார மெல்லாந் தருமே
திருக்கிலா ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. 4

1471 அறிவு மடக்கமு மன்பு முடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழ னீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே. 5

1472 ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையு
ளேனம் விளைந்தெதி ரேகாண் வழிதொறுங்
கூனன் மதிமண்ட லத்தெதிர் நீர்கண்டு
வூன மறுத்துநின் றெண்சுட ராகுமே. 6

1473 ஞானிக் குடன்குண ஞானத்தி னன்குமா
மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து
மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. 7

1474 ஞானத்தின் ஞானதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னுமை
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. 8

www.aakikceyogam.com

1475 நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
றிண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. 9

1476 ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டன்
ஞான விசேடமே நாடு பரோதய
ஞானநிர் வாணமே நன்றறி வானருண்
ஞானபி டேகமே நற்குரு பாதமே. 10

9. சன்மார்க்கம்

1477 சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. 1

1478 சைவப் பெருமைத் தனிநா யகனந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. 2

1479 தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. 3

1480 தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே. 4

www.aakikceyogam.com

1481 தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழி யான்முத்த ராவது
மீனமில் ஞானனு பூதியி லின்பமுந்
தானவ னுயுற லானசன் மார்க்கமே. 5

1482 சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு மிடத்தொடு தெய்வமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசன
மெம்மார்க்கத் தார்க்கு மியம்புவன் கேண்மினே. 6

1483 சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்குந்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றோர்
சன்மார்க்கந் தானவ னாகுஞ்சன் மார்க்கமே. 7

1484 சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்று
நன்மார்க்கந் தானே சிவனொடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே. 8

1485 அன்னிய பாசமு மாகுங் கருமமு
முன்னு மவத்தையு மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்
தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே. 9

1486 பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. 10

1487 மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றிலை
மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே. 11

www.aakikceyogam.com

10. சகமார்க்கம்

1488 சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. 1

1489 மருவுந் துவாதச மார்க்கமில் லாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்
வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகு
முருவுங் கிளையு மொருங்கிழப் பாரே. 2

1490 யோகச் சமாதியி னுள்ளே யகலிடம்
யோகச் சமாதியி னுள்ளே யுளரொளி
யோகச் சமாதியி னுள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. 3

1491 யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூப முற்றிடு முள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகு மிரண்டு மழியாத யோகிக்கே. 4

1492 ஆதார சோதனை யானடி சுத்திகண்
மேதாதி யீரெண் கலாந்தது விண்ணொளி
போதா லயத்துட் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. 5

1493 பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னை
யணங்கி யெறிவ னயிர்மன வாளாற்
கணம்பதி னெட்டுக் கருது மொருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. 6

1494 வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகு
முளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே. 7

www.aakikceyogam.com

11. சற்புத்திர மார்க்கம்

1495 மேவிய சற்புத்திர மார்க்கமே யத்தொழி
றவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழி
லாவதி ரண்டு மகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல்சன் மார்க்கத் தெளிவதே. 1

1496 பூசித்தல் வாசித்தல் போற்றல் சபித்திட
லாசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை
நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன்மற்
றசற்ற சற்புத்தி ரம்மார்க்க மாகுமே. 2

1497 அறுகாற் பறவை யலர்தேர்ந் துழலு
மறுகா நரையன்னந் தாமரை நீலங்
குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகா லறநெறி போகி லாரே. 3

1498 அருங்கரை யாவது வவ்வடி நீழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞுக ஞணை
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லா
மொருங்கரை யாயுல கேழினைத் தானே. 4

1499 உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியந்து மரனடிக் கேமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பரிக்கிலப் பான்மைய ஞமே. 5

1500 நின்று தொழுவன் கிடந்தெம்பி ரான்றன்னை
யென்றுந் தொழுவ னெழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் றெழுந்தோறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. 6

1501 திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரியை
யுருமன்னி வாழு முலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங்கை கூம்பத் தொழுது
விருமன்னு நாடோறு மின்புற் றிருந்தே. 7

www.aakikceyogam.com

12. தாச மார்க்கம்

1502 எளியன றீப மிடமலர் கொய்த
லளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல்பன் மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்றச மார்க்கமே. 1

1503 அதுவிது வாதிப் பரமென் றகல்வ
ரிதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடு
மதுவிது நெஞ்சிற் றணிக்கின்ற வாறே. 2

1504 அந்திப்பன் றிங்க ளதன்பின்பு ஞாயிறு
சிந்திப்ப னென்று மொருவன் செறிகழல்
வந்திப்ப வானவர் தேவனை நாடோறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே. 3

1505 அண்ணலை வானவ ராயிரம் பேர்சொல்லி
யுன்னுவ ருண்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றனே. 4

1506 வாசித்தும் பூசித்து மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே. 5

13. சாலோகம்

1507 சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையான்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோக மில்லாப் பரனுரு வாமே. 1

www.aakikceyogam.com

1508 சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றுஞ்
சமயாபி டேகமே தானுஞ் சமாதியே. 2

14. சாமீபம்

1509 பாசம் பசுவான தாகுமிச் சாலோகம்
பாச மருளான தாகுமிச் சாமீபம்
பாசஞ் சிரமான தாகுமிச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச்சி யம்மே. 1

15. சாரூபம்

1510 தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்குஞ்சன் மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
வங்கத் துடல்சித்தி சாதன ராகுவ
ரிங்கிவ ராக விழிவற்ற யோகமே. 1

1511 சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகுஞ் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை யிறைவன் கதிர்வடி வாமே. 2

16. சாயுச்சியம்

1512 சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தனைச் சாராம னீவுதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச்சி யம்மே. 1

www.aakikceyogam.com

1513 சாயுச்சி யஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச்சி யம்முப சாந்தத்துத் தங்குதல்
சாயுச்சி யஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச்சி யம்மனத் தானந்த சத்தியே. 2

17. சத்தி நிபாதம்

மந்தம்

1514 இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. 1

1515 தீம்புல னான தெசையது சிந்திக்கி
லாம்புல னாயறி வார்க்கமு தாய்நிற்குந்
தேம்புல னான தெளிவறி வார்கட்குக்
கோம்புல னாடிய கொல்லையு மாமே. 2

1516 இருணீக்கி யெண்ணில் பிறவி கடத்தி
யருணீங்கா வண்ணமே யாதி யருளு
மருணீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருணீங்கா வின்பம் புலம்பயி றனே. 3

1517 இருள்சூ ழறையி லிருந்தது நாடிற்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போன்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
யருள்சூ ழிறைவனு மம்மையு மாமே. 4

மந்ததரம்

1518 மருட்டிப் புணர்ந்து மயக்கமு நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
யருட்டிகழ் ஞான மதுபுரிந் தாளே. 5

1519 கன்னித் துறைபடிந் தாடிய வாடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. 6

1520 செய்யன் கரியன் வெளியனற் பச்சைய
னெய்த வுணர்ந்தவ ரெய்வ ரிறைவனை
மைவென் றகன்ற பகடுரி போர்த்தவெங்
கைய னிவனென்று காதல்செய் வீரே. 7

1521 எய்திய காலங்க ளெத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. 8

1522 கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் டாடு மலர்வார் சடையண்ண
னின்றுகண் டார்க்கிரு ணீக்கிநின் றனே. 9

தீவிரம்

1523 அண்ணிக்கும் பெண்பிள்ளை யப்பனார் தோட்டத்தி
லெண்ணிக்கு மேழேழ் பிறவி யுணர்விக்கு
முண்ணிற்ப தெல்லா மொழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது வாகுமே. 10

1524 பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கு
மறப்பை யறுக்கும் வழிபட வைக்குங்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. 11

www.aakikceyogam.com

1525 தாங்குமி னெட்டுத் திசைக்குந் தலைமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடு
மாங்கது சேரு மறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே. 12

1526 நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகினும் பன்மலர் தூவிப் பணிகுவ
னணுகிய தொன்றறி யாத வொருவ
னணுகு முலகெங்கு மாவியு மாமே. 13

தீவிரதரம்

1527 இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தாற் றன்செய லற்றுற்
றிரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. 14

1528 இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை யுன்னி
யரவஞ் செய்யாம லவளுடன் சேரப்
பரிவொன்றி லாளும் பராபரை தானே. 15

1529 மாலை விளக்கு மதியமு ஞாயிறுஞ்
சால விளக்குந் தனிச்சுட ரண்ணலுண்
ஞானம் விளக்கிய நாதனென் றுட்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே. 16

18. புறச்சமய தூடணம்

1530 ஆயத்து ணின்ற வறுசம யங்களுங்
காயத்து ணின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே. 1

www.aakikceyogam.com

1531 உள்ளத்து ளேதான் கரந்தெங்கு நின்றவன்
வள்ளற் றலைவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பை புகுந்து புறப்படுங்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. 2

1532 உள்ளத்து முள்ளன் புறத்துள்ள னென்பவர்க்
குள்ளத்து முள்ளன் புறத்துள்ள னெம்மிறை
யுள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே. 3

1533 ஆறு சமயமுங் கண்டவர் கண்டில
ராறு சமயப் பொருளு மவனலன்
றேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. 4

1534 சிவமல்ல தில்லை யறையே சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை யறுசம யங்க
டவம்வல்ல நந்திதாட் சார்ந்துய்யு நீரே. 5

1535 அண்ணலை நாடிய வாறு சமயமும்
விண்ணவ ராக மிகவும் விரும்பியே
முண்ணின் றழிய முயன்றில ராதலான்
மண்ணின் றொழியும் வகையறி யார்களே. 6

1536 சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றி
லவகதி மூவரு மவ்வகை யாமே. 7

1537 நூறு சமய முளவா நுவலுங்கா
லாறு சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
வீறு பரநெறி யில்லா நெறியன்றே. 8

www.aakikceyogam.com

1538 கற்றுங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்தசிவ னெங்குந் தோய்வுற்று நிற்கின்றன்
குற்றந் தெளியார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே. 9

1539 மயங்குகின் றரு மதிதெளிந் தாரு
முயங்கி யிருவினை முழைமுகப் பாச்சி
யியங்கிப் பெறுவரே லீறது காட்டிற்
பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. 10

1540 சேய னணியன் பிணியிலன் பேர்நந்தி
தூயன் றுளக்கற நோக்கவல் லார்கட்கு
மாயன் மயக்கிய மானிட ராமவர்
காயம் விளைக்குங் கருத்தறி யார்களே. 11

1541 வழியிரண் டுக்குமோர் வித்தது வான
பழியது பார்மிசை வாழ்த லுறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
றழிவறி வார்நெறி நாடநில் லாரே. 12

1542 மாதவ ரெல்லாமா தேவன்பி ரானென்பர்
நாதம தாக வறியப் படுநந்தி
பேதஞ் செய்யாதே பிரானென்று கைதொழி
லாதியு மந்நெறி யாகிநின் றானே. 13

1543 அரனெறி யப்பனை யாதிப் பிரானை
யுரநெறி யாகி யுளம்புகுந் தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே. 14

1544 பரிசறி வானவன் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றிற் றிகழுந்
தூரிசற நீநினை தூய்மணி வண்ண
னரிதவன் வைத்த வறநெறி தானே. 15

www.aakikceyogam.com

1545 ஆன சமய மதுவிது நன்றெனு
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமி
னூனங் கடந்த வுருவது வாமே. 16

1546 அந்நெறி நாடிய வமரர் முனிவருஞ்
சென்னெறி கண்டார் சிவனெனப் பெற்றார்பின்
முன்னெறி நாடி முதல்வ னருளிலார்
சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. 17

1547 உறுமா றறிவதும் முண்ணின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன்று மில்லை
யறுமா றதுவான வங்கியு ளாங்கே
யிறுமா றறிகில ரேழைக டாமே. 18

1548 வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. 19

1549 வழிசென்ற மாதவம் வைகின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லி லும்பர் தலைவன்முன் னாமே. 20

19. நிராசாரம்

1550 இமையங்க ளாய்நின்ற தேவர்க ளாறு
சமையங்கள் பெற்றனர் சாத்திர மோதி
யமையறிந் தோமென்ப ராதிப் பிரானுங்
கமையறிந் தாருட் கலந்துநின் றானே. 1

1551 பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியி னேரொப்பர்
நீங்கிய வண்ண நினைவுசெய் யாதவ
ரேங்கி யுலகி லிருந்தழு வாரே. 2

www.aakikceyogam.com

1552 இருந்தழு வாரு மியல்புகெட் டாரு
மருந்தவ மேற்கொண்டங் கண்ணலை யெண்ணில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே. 3

1553 தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் றனுண்பர்
காரறி வாளர் கலந்து பிறப்பர்க
ணீரறி வார்நெடு மாமுகி லாமே. 4

1554 அறிவுடன் கூடி யழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. 5

1555 மன்னு மொருவன் மருவு மனோமய
னென்னின் மனித ரிகழ்வரிவ் வேழைக
டுன்னி மனமே தொழுமின் றுணையிலி
தன்னையு மங்கே தலைப்பட லாமே. 6

1556 ஓங்காரத் துள்ளொளி யுள்ளே யுதயமுற்
றங்கார மற்ற வனுபவங் கைகூடார்
சாங்கால முன்னுர் பிறவாமை சார்வுறர்
நீங்காச் சமயத்து ணின்றெழிந் தார்களே. 7

20. உட்சமயம்

1557 இமையவர் தம்மையு மெம்மையு முன்ன
மமைய வகுத்தவ னுதி புராணன்
சமையங்க ளாறுந்தன் றளிணை நாட
வமையங் குழல்கின்ற வாதிப் பிரானே. 1

1558 ஒன்றது பேரூர் வழியா றதற்குள
வென்றது போல விருமுச் சமயமு
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. 2

www.aakikceyogam.com

1559 சைவப் பெருமைத் தனிநாய கன்றன்னை
யுய்ய வுயிர்க்கின்ற வொண்சுடர் நந்தியை
மெய்ய பெருமையர்க் கன்பனை யின்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே. 3

1560 சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்
பவனவன் வைத்த பழவழி நாடி
யிவனவ னென்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள தாங்கட னாமே. 4

1561 ஆமா றுரைக்கு மறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்
காமாம் வழியாக்கு மவ்வே றுயிர்கட்கும்
போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே. 5

1562 அரனெறி யாவ தறிந்தேனு நானுஞ்
சிரநெறி தேடித் திரிந்தவந் நாளு
முரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே. 6

1563 தேர்ந்த வரனை யடைந்த சிவநெறி
பேர்ந்தவ ருன்னிப் பெயர்ந்த பெருவழி
யார்ந்தவ ரண்டத்துப் புக்கவ் வருணெறி
போந்து புனைந்து புணர்நெறி யாமே. 7

1564 ஈரு மனத்தை யிரண்டற வீசுமி
னூருஞ் சகாரத்தை யோதுமி னேதியே
வாரு மரனெறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே. 8

1565 மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனற்குறி யாளனை யாதிப்பி ரான்றனை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி
னயக்குறி காணி லரனெறி யாமே. 9

www.aakikceyogam.com

1566 ஆய்ந்துண ரார்களி ஞன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற வரனெறி
பாய்ந்துணர் வாரரன் சேவடி கைதொழு
தேர்ந்துணர் செய்வதோ ரின்பமு மாமே. 10

1567 சைவ சமயத் தனிநா யகனந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வ சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. 11

1568 இத்தவ மத்தவ மென்றிரு பேரிடும்
பித்தரைக் காணி னகுமெங்கள் போர்நந்தி
யெத்தவ மாகிலெ னெங்கு பிறக்கிலெ
னொத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. 12

1569 ஆமே பிரான்முக மைந்தொடு மாருயி
ராமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கு
நாமே பிரானுக்கு நரரியல் பாமே. 13

1570 ஆதிப்பி ரானுல கேழு மளந்தவ
னோதக் கடலு முயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையி னின்ற பராசத்தி
யாதிக்கட் டெய்வமு மந்தமு மாமே. 14

1571 ஆய்ந்தறி வார்க ளமரர் வித்தியாதர
ராய்ந்தறி யாவண நின்ற வரனெறி
வாய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழக்
காய்ந்தறிந் தேனிம்மை யம்மைகண் டேனே. 15

1572 அறியவொண் ணதவ் வுடம்பின் பயனை
யறியவொண் ணத வறுவகை யாக்கி
யறியவொண் ணத வறுவகைக் கோசத்
தறியவொண் ணததோ ரண்டம் பதிந்ததே. 16

www.aakikceyogam.com